Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சேவை
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன்கிழமை, செப்டம்பர் 01, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 49

## பள்ளி, கல்லூரிகளுக்கு அருகில் போதைப் பொருட்கள் விற்பனை செய்வோருக்கு கடுமையான தண்டனை.

# பா.ம.க. தலைவர் ஜி.கே.மணிக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில்



சென்னை, செப்டம்பர் 01 2021: சட்டசபையில் இன்று கேள்வி நேரத்தின் போது பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி, 'தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் விற்பனையை முற்றிலும் தடுக்க அரசு முன்வருமா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அளித்த பதில் வருமாறு:-

இந்த அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்து 29.8.2021 வரை தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் விற்பனை தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை விற்பவர்கள், கடத்துபவர்கள் ஆகியோர் மீது 10,673 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. 11,247 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

இவர்களிடம் இருந்து 149.43 டன் குட்கா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 113 நான்கு சக்கர வாகனங்களும், 106 இருசக்கர வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 15 பேர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களை விற்றது மற்றும் கடத்தியது தொடர்பாக 2,458 வழக்குகள் போதைப்பொருள் தடுப்பு பிரிவில் பதிவு செய்யப்பட்டு 5,793 கிலோ கஞ்சா மற்றும் இதர போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 3,413 பேர் கைது செய்யப்பட்டு அதில் 81 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

போதைப்பொருட்கள் விற்பனை செய்வோர் மற்றும் கடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போதை பொருள் விற்பனையும் முற்றிலும் தடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜி.கே.மணி:- போதை பொருள் உற்பத்தி செய்வது, கடத்தி வருவது, விற்பனை செய்வது என்பது மாபெரும் குற்றமாகும். முதல்-அமைச்சர் சொன்னது போல் இதை தடை செய்தாலும், தடுப்பு நடவடிக்கை எடுத்தாலும் கூட பள்ளி, கல்லூரிகள், மாணவ-மாணவிகள் விடுதிகள் முன்பு விற்கப்படுகிறது.

சென்னை மெரினா கடற்கரையில் பொதுமக்கள் கூடும் இடங்களில் எல்லாம் வறுமையின் காரணமாக இளைஞர்களை வைத்து போதைப்பொருட்களை விற்கிறார்கள். குறிப்பாக பான் மசாலா, கஞ்சா, குட்கா போன்ற நிறைய போதைப்பொருட்கள் வட மாநிலங்களில் இருந்து கடத்திவரப்பட்டு தமிழ்நாட்டில் விற்கப்படுகிறது. பதுக்கியும் வைக்கப்படுகிறது.

இதை மாணவ-மாணவிகள் பயன்படுத்துவதால் நாளடைவில் அடிமையாகி விடுகிறார்கள். இது சமுதாயத்தையே சீரழிக்கும் நிகழ்வாக தொடர்கிறது. எனவே தடை நடவடிக்கை என்பது போதாது. இதற்காக 1985-ம் ஆண்டுக்கான தடை சட்டம் இருக்கின்றது.

இந்த தடை சட்டத்தில் மேலும் திருத்தங்கள் கொண்டுவந்து முற்றிலுமாக ஒழிப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்:- ஏற்கனவே போதை மற்றும் மன மயக்க பொருட்கள் தடை சட்டம் 1985-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தாலும் பள்ளி, கல்லூரிகளுக்கு அருகிலேயே போதைப் பொருட்கள் விற்பனை செய்வோருக்கு கடுமையான தண்டனைகள் வழங்க அந்த சட்டத்திலே புதிய திருத்தங்கள் கொண்டு வரப்படும். புதிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

ஜி.கே.மணி:- இந்த பணியில் ஈடுபடும் போலீசார் மிகப்பெரிய சவால்களை சந்திக்க வேண்டிய நிலை உள்ளது. அவர்களை ஊக்கப்படுத்த ஊக்க ஊதியம் மற்றும் ரிஸ்க் அலவன்ஸ் வழங்கப்படுமா?

முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின்:- காவல்துறையினரை ஊக்குவிக்க நிச்சயம் இந்த அரசு தயங்காது. இதுகுறித்து பரிசீலித்து, ஆராய்ந்து, என்னென்ன வகையிலே அவர்களுக்கு சிறப்பு செய்ய வேண்டுமோ, அதைப் பரிசீலித்து, அவர்களுக்குரிய ரிவார்டு நிச்சயம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு விவாதம் நடந்தது.

# 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை நாளை முதல் பள்ளிகள் திறப்பு

## மாணவர்கள் கட்டாயமாக வரவேண்டியது இல்லை



மதுரை, செப்டம்பர் 01 2021: தமிழ்நாட்டில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பள்ளிகள் நாளை திறக்கப்பட்டாலும் மாணவர்கள் கட்டாயமாக வரவேண்டியது இல்லை என்று தமிழ்நாடு அரசு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கொரோனா இரண்டாவது அலையின் தாக்கம் காரணமாக பள்ளி மற்றும் கல்லூரிகள் திறக்கப்படாமல் ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டது. இந்நிலையில், 'பல மாதங்களாக மாணவர்கள் வீடுகளில் இருப்பதால் மன அழுத்தம் ஏற்படுகிறது; எனவே பள்ளிகளை திறக்க உத்தரவிட வேண்டும்' என பல தரப்பில் இருந்து கோரிக்கை வைக்கப்பட்டது.

இதையடுத்து, பள்ளிகள் திறப்பது குறித்து மருத்துவ நிபுணர்கள் மற்றும் பல்வேறு தரப்பு மக்களின் ஆலோசனை கேட்டு பள்ளிகளை திறப்பது குறித்து தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, நாளை 1ம் தேதிமுதல் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு நேரடி வகுப்புகள் தொடங்க உள்ளதாக உத்தரவிடப்பட்டது.

மேலும், பள்ளிகளில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் எனவும், அவ்வாறு செலுத்தாதவர்கள் பள்ளிகளுக்கு செல்ல அனுமதி இல்லை என உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் பள்ளிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் பள்ளிகள் திறக்கப்பட்டாலும், ஆன்லைன் வகுப்புகளை தொடர உத்தரவிடக்கோரி அப்துல் வகாப் என்பவர் தொடர்ந்த வழக்கு, உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் விசாரணைக்கு வந்தது. அதில், "கொரோனா தடுப்பூசியை 18 வயதிற்கு கீழ் உள்ளவர்களுக்கு செலுத்துவது தொடர்பாக இதுவரை தெளிவான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. தடுப்பூசிகள் செலுத்தப்படாமல் மாணவர்கள், பள்ளி, கல்லூரிகளுக்கு செல்வது கொரோனா பரவலை அதிகரிக்க செய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவித்திருந்தார்.

இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, "தமிழ்நாட்டில் நாளை பள்ளிகள் திறந்தாலும், மாணவர்கள் வகுப்புகளுக்கு வர வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என்றும் ஆன்லைன் வகுப்புகளும் தொடர்ந்து நடைபெறும் என்றும் தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம் உயர்நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளார்.

# ஓசூர் தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷின் மகன் கருணா சாகருடன் சொகுசு காரில் பயணம் செய்த நண்பர்கள் 7 பேர் கோர விபத்தில் பலி

ஓசூர், செப்டம்பர் 01 2021: ஓசூர் சட்ட மன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷின் மகன் கருணா சாகர் உள்ளிட்ட 7பேர் பெங்களூர் கோரமங்களா பகுதியில் நேற்று அதிகாலை சுமார் 2.00மணி அளவில் நடந்த கோர விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றொருவர் மருத்துவமனையில் அனுமதிக்க பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக கர்நாடக மாநிலம் பெங்களூரு கோரமங்களாவைச் சேர்ந்த காவல் துறையினர் விபத்து நடந்த இடத்திற்கு சென்று உடல்களை பிரேத பரிசோதனக்காக மருத்துவமணைக்கு அனுப்பி பின்னர் வழக்கு பதிவு செய்து விபத்து குறித்து விசாரணை செய்து வருகின்றனர். சொகுசு காரில் அதிவேக பயணம் தான் இந்த விபத்துக்கு காரணம் என்றும் அருகில் இருந்த மின் கம்பத்தில் மோதியும்,சாலை தடுப்பு மற்றும் அருகில் உள்ள கட்டிடத்தில் மோதி இந்த விபத்து நடந்துள்ளது,உயிரிழந்தவர்கள் பெயர் பட்டியலை பெங்களூர் போலீசார் வெளியிட்டுள்ளனர். ஒசூரைச் சேர்ந்த கருணாசாகர்(ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ மகன்) கேரளாவைச்சேர்ந்த (அக்சய் கோயல்) ஹரியானாவைச் சேர்ந்த ( உத்சவ்) , கர்நாடக மாநிலம் ஹூப்ளியைச் சேர்ந்த (ரோகித்) ஆகியோர் உயிரிழந்த ஆண்களாகும். மீதி மூன்று பேர் பெண்கள் ஆவர்,





இதில், கருணாசாகர் தவிர பிறர் அனைவரும் பெங்களூரிலுள்ள விடுதிகளில் தங்கியிருந்தவர்கள் என்று கூறப்படுகிறது. விபத்து நடந்த போது காரில் இருந்தவர்கள் மது அருந்து விட்டு வாகனம் ஓட்டினார்களா என்பது பிரேதே பரிசோதனை செய்து பரிசோதனை அறிக்கை வந்த பின்னர் தான் தெரியும் என்று கர்நாடக காவல் துறையினர் தெரிவித்தனர். ஓசூர் திமுக சட்டமன்ற ஒய்பிரகாஷின் மனைவி உடல்நல குறைவால் சில மாதங்களுக்கு முன் இறந்த நிலையில் தற்போது அவருடைய மகனும் விபத்தில் இறந்த துயர சம்பவம் நடந்திருப்பது அப்பகுதியில் மிகவும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஒன்னரை கோடி தொண்டர்கள் கொண்ட அ.தி.மு.க.,வை யாராலும் அசைக்க முடியாது முடக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய் வழக்குகள் - சி.வி. சண்முகம்



விக்கிரவாண்டி, செப்டம்பர் 01 2021: தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாமல், அ.தி.மு.க., ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை முடக்கும் தி.மு.க., மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை.

உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க., வெற்றி உறுதி.முன்னாள் அமைச்சர் சண்முகம் பேச்சு. விக்கிரவாண்டி தெற்கு ஒன்றிய அ.தி.மு.க., சார்பில் உள்ளாட்சி தேர்தல் பணிகள் குறித்து பனையபுரத்தில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் தெற்கு ஒன்றிய செயலாளர் முகுந்தன் வரவேற்றார். கூட்டத்திற்கு தலைமை தாங்கி முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளர் சண்முகம் பேசியதாவது.

நடந்த கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க., ஆட்சியில் மக்களிடம் நல்ல பெயரை பெற்றுள்ளோம் .அதனால் தான் முடிந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.,விடம் மூன்று சதவிகித ஓட்டுகள் வித்தியாசத்தில் அ.தி.மு.க., ஆட்சியை இழந்துள்ளது. மக்கள் அ.தி.மு.க., மீது வைத்துள்ள நம்பிக்கையால் , சட்டமன்றத்தில் மிகப் பெரிய எதிர்கட்சி பொறுப்பில் அமர்ந்து, ஆட்சியின் அராஜகத்தினை தட்டிக் கேட்கும் இடத்தில் அ.தி.மு.க., உள்ளது.

கடந்த ஆட்சியில் கிராமபுற பெண்கள் முன்னேற முன்னாள் முதல்வர் ஜெ., ரூபாய் 1500 கோடி திட்டத்தில் மகளிருக்கு வழங்கிய கறவைமாடு, ஆடு, கோழி வழங்கும் திட்டமும், பெண்கள் வேலைக்கு எளிதாக சென்று வர அம்மா ஸ்கூட்டி திட்டம்போன்ற பல்வேறு திட்டங்கள் தி.மு.க., ஆட்சியில் முடக்கப்பட்டுள்ளது.

ஆட்சிக்கு வந்த நான்கு மாத காலத்திற்குள் தி.மு.க., தலைவர் ஸ்டாலின் , அ.தி.மு.க., வை முடக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அ.தி.மு.க., தலைவர்கள் மீது பொய் வழக்குகளை போட்டு வருகிறார். ஒன்னரை கோடி தொண்டர்கள் கொண்ட அ.தி.மு.க.,வை யாராலும் அசைக்க முடியாது.

தேர்தலில் மக்களிடம் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி வெற்றி பெற்ற தி.மு.க., வெற்றி பெற்ற பிறகு திட்டங்களை செயல்படுத்த முடியாது. அ.தி.மு.க., ஆட்சியில் கடன்கள் அதிகம் வாங்கியுள்ளது என கூறி வருகின்றனர்.

அ.தி.மு.க., ஆட்சியில் கடன்கள் வாங்கி மக்களுக்கு தேவையான நல்ல பல திட்டங்களை செய்துள்ளோம். ஏழை எளிய மாணவர்கள் உயர்கல்வி பயில 35 லட்சம் மாணவர்களுக்கு மடி கணணி வழங்கியுள்ளோம் . இந்த ஆட்சியில் சட்டசபையில் எதிர்கட்சி தலைவர் எடப்பாடிபழனிசாமி மாணவர்களுக்கு

மடி கணணி வழங்கப்படுமா என்ற கேள்வி சரியான பதிலில்லை. அமைதி காக்கின்றனர். அப்படி என்றால் இந்த திட்டத்தினையும் தி.மு.க., முடக்க திட்டமிட்டுள்ளது என தெரிகிறது. கடந்த 4 மாத கால ஆட்சியில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் தி.மு.க., மீது மக்கள் வெறுப்பாக உள்ளனர்.

வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க., அனைத்து அணி நிர்வாகிகள், தொண்டர்கள் ஒற்றுமையுடன் தேர்தல் பணியில் ஈடுபட்டு,மக்கள் மத்தியில் அ.தி.மு.க., ஆட்சியில் செய்த திட்டங்களை எடுத்து கூற வேண்டும் . உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க., பெருமான்மையான வெற்றி பெறுவது உறுதியாகும். இவ்வாறு அமைச்சர் சண்முகம் பேசினார்.

மாநில பொதுக்குழு உறுப்பினர் லட்சுமி நாராயணன், ஒன்றிய தலைவர் அசோகன், நகர செயலாளர் பூர்ணராவ், முன்னாள் பாசறை செயலாளர் குமாரராஜா, ஒன்றிய துணை செயலாளர் நாகப்பன், ஒன்றிய அணி செயலாளர்கள் ஜெ., பேரவை ஜோதிராஜா, மாணவரணி கோபாலகிருஷ்ணன், இளைஞரணி நரசிம்மன், இளைஞர் பாசறை சுபாகர்,இலக்கிய அணி ஓம்சக்தி, கண்ணன், தொழில்நுட்பபிரிவு ராதாகிருஷ்ணன்,மகளிரணி சிவகாமி லட்சுமணன், மாவட்ட பிரதிநிதி தொரவி சுப்ரமணி, ராஜாங்கம் , தயாநிதி கண்ணப்பன் மற்றும் அனைத்து கிளை செயலாளர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி தெற்கு ஒன்றிய அ.தி.மு.க., நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சண்முகம் பேசினார். அருகில் ஒன்றிய செயலாளர் முகுந்தன்.

# வைகோவுடன், இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டைமான் சந்திப்பு

மதுரை, செப்டம்பர் 01 2021: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர், இலங்கை அரசின் தோட்ட வீடமைப்பு சமூக உட்கட்டமைப்புத் துறை அமைச்சர் ஜீவன் தொண்டைமான், சென்னை அண்ணா நகரில், மறுமலர்ச்சி தி.மு.க பொதுச்செயலாளர் வைகோவைச் சந்தித்தார்.

தனது தந்தையார் ஆறுமுகம் தொண்டைமான் அவர்களுடைய மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டு இருந்தமைக்காக வைகோ அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். தங்களைப் பற்றி, என் தந்தையார் நிறைய செய்திகளை எனக்குச் சொல்லி இருக்கின்றார் என்றார்.

உங்கள் தாத்தா, பெரியவர் சௌமியமூர்த்தி தொண்டைமான் அவர்களுடன் எனக்கு நீண்ட காலப் பழக்கம் உண்டு. எண்பதுகளில் தொடங்கி, பலமுறை சந்தித்து இருக்கின்றேன்; பல நிகழ்வுகளில் அவருடன் ஒன்றாகப் பங்கேற்று இருக்கின்றேன். தோட்டத் தொழிலாளர்களின் நலன் காக்கப் பணி ஆற்றினார். அவர்களின் குரலாக நாடாளுமன்றத்தில் முழங்கினார்.

அதேபோல, உங்கள் தந்தையார் ஆறுமுகம் தொண்டைமான் அவர்கள், சென்னைக்கு வரும்போதெல்லாம் என்னைச் சந்திப்பது வழக்கம். எதிர்பாராத வகையில், குறைந்த வயதில் அவர் திடீரென இயற்கை எய்தியது அதிர்ச்சியாக இருந்தது.

26 வயதிலேயே நீங்கள் அமைச்சர் பொறுப்பு ஏற்று இருக்கின்றீர்கள். என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டும். உங்களுக்கு நிறையக் கடமைகள் இருக்கின்றன என்று, வைகோ குறிப்பிட்டார்.

ஆமாம் ஐயா, தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக, நுவரேலியாவில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும். தமிழக அரசின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம். அதற்காக முதல்வரையும் சந்திக்க இருக்கின்றோம் என அமைச்சர் தெரிவித்தார். நீங்கள் இலங்கைக்கு வந்து தோட்டத் தொழிலாளர்களைச் சந்திக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்.



தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழர்களின் நலன்களுக்காக, தமிழ்நாடு அரசு ரூ 300 கோடி ஒதுக்கி இருப்பதை வைகோ குறிப்பிட்டார். தொடர்ந்து, ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து, இருவரும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
செப்டம்பர் 01, 2021

# ராமேசுவரம் மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டம் வாபஸ்

ராமேசுவரம், செப்டம்பர் 01 2021: ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் புதிய விசைப்படகுகள்,வெளிமாவட்ட விசைப்படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதை தடுக்க கோரி அறிவித்த வேலை நிறுத்த போராட்டம் சனிக்கிழமை வாபஸ் பெற்றனர். ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் அனைத்து விசைப்படகு மீனவ சங்கம் கூட்டம் கடந்த 25 ஆம் தேதி புதன்கிழமை பொருளாளர் சகாயம் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், ராமேசுவரம் துறைமுகத்தில் விசைப்படகுகளில் எண்ணிக்கை அதிகளவில் உள்ளதால் வெளிமாவட்டம், புதிய விசைப்படகுகளை வாங்கி வந்து ராமேசுவரம் துறைமுகத்தில் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதை தடுக்க வேண்டும். அத்துமீறி வந்ததால் எந்த விசைப்படகுகளுடன் கடலுக்கு மீன்பிடிக்க செல்லுவதில்லை, அரசால் தடை செய்யப்பட்ட இரட்டைமடி மற்றும் சுருக்குமடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதை தமிழக அரசு தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். டீசல் விலை உயர்வு காரணமாக மீன்பிடிக்க செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் இதனால் மானிய டீசல் உயர்த்தி வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை வலியுருத்தி வரும் 28 ஆம் தேதி முதல் ஒரு வாரத்திற்கு வேலை நிறுத்த போராட்டம் மேற்கொள்ளுவது என அறிவித்தனர்.

இந்த நிலையில், சனிக்கிழமை வேலை நிறுத்த போராட்டம் மேற்கொள்ள இருந்த நிலையில் வெள்ளிக்கிழமை இரவு மீன்வளத்துறை அதிகாரிகள் மற்றும் மீனவ சங்கம் நிர்வாகிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் மீனவர்கள் கோரிக்கை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என மீன்வளத்துறை அதிகாரிகள் உறுதியளித்தனர். இதனைதொடர்ந்து போராட்டத்தை வாபஸ் பெற்று வழக்கம் போல சனிக்கிழமை கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

# கடமலை மயிலை ஒன்றியத்தில் கிடப்பில் போடப்பட்ட தார் சாலை அமைக்கும் பணி வனத்துறையினரின் அனுமதிக்க பின் தீவிரம்



வருஷநாடு, செப்டம்பர் 01 2021: கடமலை மயிலை ஒன்றியம் முருக்கோடை முதல் காமராஜபுரம் வரை ரூபாய் 2 கோடியே 19 லட்சம் மதிப்பில் பிரதம மந்திரி கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு டெண்டர் எடுக்கப்பட்டு இதற்கான பணி பாதி முடிவடைந்த நிலையில் வனத்துறையினர் தடை விதித்ததால் பணி நிறுத்தப்பட்டது. இதனால் காமராஜபுரம் இந்திரா நகர் கவுண்டர் குடிசை உரை கொண்டான் பால சுப்பிரமணியபுரம் ஆகிய கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மிகவும் போக்குவரத்து இன்றி சிரமப்பட்டு வந்தனர். கிராமங்களில் விளையும் விளை பொருட்களை கொண்டு வருவதற்கும் வருஷநாடு இல் இருந்து இடு பொருட்களை கொண்டு செல்வதற்கும் பயன்பாட்டிற்கு லாயக்கற்ற சாலையால் மிகவும் சிரமப்பட்டனர். பல தரப்பட்ட பேச்சுவார்த்தைக்கு பின் வனத்துறையினர் ஒப்புதல் வழங்கியது இதனால் கிடப்பில் போடப்பட்ட தார் சாலை அமைக்கும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்றதால் காமராஜபுரம் வரை இயக்கிய பேருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே உடனே தார் சாலையை விரைவாக சீரமைத்து பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என காமராஜபுரம் கிராமத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் தங்கப் பெருமாள் கோரிக்கை வைத்துள்ளார்.

# மயிலத்தில் காவலர்களின் குடும்பங்களுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்



திண்டிவனம், செப்.01 2021: திண்டிவனம் அடுத்த மயிலம் காவலர் குடியிருப்பில் காவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாம் நடந்தது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மோகன் உத்தரவின்பேரில் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலர்கள் ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் 100% தடுப்பூசி செலுத்தப்பட வேண்டுமென இலக்கினை அடைய சுகாதாரத்துறை மற்றும் ஊராட்சித் துறை ஊழியர்களின் ஒத்துழைப்புடன் கொரோனா தடுப்பூசி ஆனது தற்பொழுது மாவட்டம் முழுவதும் செலுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஒவ்வொரு வட்டார மருத்துவ அலுவலர்களுக்கும் ஒரு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதன்படி செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் விழுப்புரம் மாவட்ட சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் பொற்கொடி மேற்பார்வையில் மயிலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் தேன்மொழி தலைமையில் அவர்களது இலக்கான 1500 முதல் 2000 தடுப்பூசிகள் செலுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று காலை மயிலம் காவலர் குடியிருப்பில் இன்ஸ்பெக்டர் கிருபா லட்சுமி ஏற்பாட்டில் மயிலம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இந்த சிறப்பு முகாமிற்கான ஏற்பாடுகளை மயிலம் சுகாதார ஆய்வாளர் துரைசாமி மற்றும் ஊராட்சி செயலர் சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

# கோவைக்கு ஊரடங்கில் புதிய கட்டுப்பாடுகள்: மாவட்ட ஆட்சியர் உத்தரவு

கோவை, செப்டம்பர் 01 2021: கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கிராஸ்கட் சாலை, 100 அடி சாலை, ஒப்பணக்கார வீதி, ராமமூர்த்தி சாலை, சாரமேடு சாலை, ரைஸ்மில் சாலை, என்.பி.இட்டேரி சாலை, சிங்காநல்லூர் சிக்னல் முதல் ஒண்டிப்புதூர் மேம்பாலம் வரை (திருச்சி சாலை) ஹோப் காலேஜ் சிக்னல் (அவினாசி ரோடு), காளப்பட்டி ரோடு (நேரு நகர்), டி.பி.ரோடு, திருவேங்கடசாமி ரோடு, என்.எஸ்.ஆர்.ரோடு, ஆரோக்கிய சாமி ரோடு (கிழக்கு , மேற்கு கடைகள்), சரவணம்பட்டி சந்திப்பு கணபதி பேருந்து நிலைய சந்திப்பு, துடியலூர் சந்திப்பு மார்கெட்டு கடைகள், பீளமேடு ரொட்டி கடை மைதான கடைகள், காந்திமாநகர் சந்திப்பு, ஆவாரம்பாளையம் சந்திப்பு, பாரதி நகர் (கணபதி), பாப்பநாயக்கன்பாளையம் சந்திப்பு, ராஜ வீதி, பெரிய கடை வீதி, வெரைட்டி ஹால் வீதி, என்.எச்.ரோடு, இடையர்வீதி, வைசியாள் வீதி, தாமஸ்வீதி, சுக்கிரவாரபேட்டை வீதி, மரக்கடை வீதி, ரங்கே கவுண்டர் வீதி, காந்திபுரம் 1 முதல் 11ம் எண் வரை உள்ள தெருக்கள் மற்றும் சல்லீவன் வீதி ஆகிய தெருக்களில் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படுவதால் அத்தெருக்களில் இயங்கும் அத்தியாவசிய கடைகளான பால், மருந்தகம், காய்கறி கடைகள் தவிர மற்ற கடைகள் அனைத்தும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்க தடை விதிக்கப்படுகிறது. மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து நகைகடைகள் மற்றும் துணிகடைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்க தடை விதிக்கப்படுகிறது. அனைத்து பூங்காக்களிலும், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொதுமக்கள் வருகைக்கு தடைவிதிக்கப்படுகிறது. அனைத்து மால்களும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்க தடைவிதிக்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள அத்தியாவசிய கடைகள் தவிர அனைத்து கடைகளும் இரவு 10 மணிக்கு மூடப்படுவதற்கு ஏதுவாக வாடிக்கையாளர்களை இரவு 8 மணி அளவில் கட்டுப்படுத்த வேண்டும். மேலும் அனைத்து பணியாளர்களும் கண்டிப்பாக ஒரு தவணை தடுப்பூசியாவது செலுத்தப்பட்டிருப்பதை கடை உரிமையாளர்கள் உறுதி செய்ய வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து உணவகங்களும், அடுமனைகளும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை 50 சதவீத வாடிக்கையாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை பார்சல் சேவைக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது. மார்க்கெட்டுகளில் மொத்த விற்பனை நிலையங்களுக்கு மட்டும் அனுமதி மற்றும் 50 சதவிகித கடைகள் சுழற்சி முறையில் இயங்க அனுமதிக்கப்படும்.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் இதனை கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகள் சுழற்சி முறையில் 50 சதவிகித கடைகளுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து வார சந்தைகளும் இயங்க தடை விதிக்கப்படுகிறது. பொள்ளாச்சி மாட்டு சந்தை தற்காலிகமாக இயங்க தடைவிதிக்கப்படுகிறது. கேரள-தமிழ்நாடு மாநில எல்லைகள் அனைத்தும் சோதனைச்சாவடி அமைத்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சோதனைச்சாவடி வழியாக கோயம்புத்தூர் மாவட்டத்திற்குள் வரும் பயணிகள் அனைவரும் 72 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட கோவிட் சான்று அல்லது கொரோனா தடுப்பூசி (2 தவணைகள்) செலுத்தப்பட்டதற்கான சான்று உடன் வைத்திருக்க வேண்டும்.

மேற்கண்ட சான்றுகள் இல்லையெனில் திருப்பி அனுப்பப்படுவர். 01.09.2021 முதல் அனைத்து பள்ளிகளிலும் 9, 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்புகள் மற்றும் கல்லூரி வகுப்புகளும் சுழற்சி முறையில் கொரோனா நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலிருந்து பள்ளி கல்லூரிகளுக்கு வரும் மாணவ மாணவியர்கள் தினசரி வந்து செல்ல அனுமதியில்லை. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கான அனைத்து விடுதிகள் மற்றும் பணிபுரிபவர்களுக்காக செயல்படும் விடுதிகள் ஆகியவற்றில் தங்குபவர்கள் மற்றும் பணியாற்றுபவர்கள் என அனைவரும் தடுப்பூசிகள் செலுத்தியிருப்பதுடன், கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தற்போது கேரள மாநிலத்தில் நிலவி வரும்கொரோனா தோய்த் தொற்று பரவல் நிலையினைக்கருத்தில் கொண்டு அங்கிருந்து வரும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் தடுப்பூசி செலுத்தியிருப்பதுடன், பரிசோதனை சான்றும் பெற்றிருப்பதை சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகம் உறுதி செய்து கொள்ள வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து திருமண மண்டபங்களில் நடைபெறவுள்ள திருமண நிகழ்ச்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை வாரத்திற்கு மூன் சம்பத்தப்பட்ட வட்டாட்சியர்களிடம் தெரிவித்து அனுமதி பெற வேண்டும் என அனைத்து திருமண மண்டப உரிமையாளர்களுக்கும் அறுவுறுத்தப்படுகிறது. மாறாக முன் அனுமதியின்றி நடைபெறும் திருமணம் உள்ளிட்ட அனைத்து வித நிகழ்வுகளுக்கும் சம்மந்தப்பட்ட திருமண மண்டப உரிமையாளர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து நிலையான இயக்க நடைமுறைகளையும் பின்பற்றி 50 நபர்களுக்கு மிகாமல் திருமண நிகழ்ச்சி/இதர நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை கடுமையாக பின்பற்றப்பட வேண்டியது அனைத்து பொதுமக்களின் கடமையாகும் மக்கள் அனைவரும் தமிழ்நாடு அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து கொரோனா தடுப்பு நிலையான இயக்க நடைமுறைகளை பின்பற்றி மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு அளித்திட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், 14 கிராமங்கள் தேர்வு

ராமேசுவரம், ஆக. 01 2021: கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி தி;ட்டத்திற்கு 14 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு முகாம் 31, 01 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற உள்ளதாக வேளண்மை உதவி இயக்குநர் அமர்லால் சனிக்கிழமை தெரிவித்தார். இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் அமர்லால் சனிக்கிழமை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையில் இருந்து சிறப்பு திட்டமாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு வட்டாரத்தில் இருந்து ஏழு பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு அதில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகம், கால்நடை பராமரிப்பு துறை, மீனவர் நலத்துறை திட்ட்ங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

திருப்புல்லாணி வட்டாரத்தில் 2021-22 ம் ஆண்டிற்கு திருப்புல்லாணி வட்டாரத்தில் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகள் காஞ்சிரங்குடி, பெரியபட்டினம், வேளானூர், குலபதம், ஆலங்குளம், எக்ககுடி, லாந்தை, இதே போன்று உச்சிப்புளி வட்டாரத்தில் குயவன்குடி, நொச்சியூரணி, என்மனம்கொண்டான், கும்பரம், கீழநாகாச்சி, தேர்போகி, புதுமடம் ஆகிய 14 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த திட்டம் செயல்படுத்துவது குறித்து திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. இதில்,ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் டாம் பி சைலஸ் கலந்து கொண்டு திட்டம் குறித்து ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு எடுத்துரைத்தார். திருப்புல்லாணி வேளாண்மை உதவி இயக்குநர் அமர்லால், உதவி வேளாண்மை அலுவலர்கள், தவமுருகன், முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். அடிப்படை தகவல்கள் சேகரிப்பது குறித்து ஊராட்சி மன்ற தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினர். இதே போன்று மண்டபம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு கூட்டத்தில் வேளாண்மை அலுவலர் கலைவாணி, உதவி விதை அலுவலர் ஆனந்த குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் முகமது யூ;சுப், சிரஞ்சீவி, பூமலர், கஸ்தூரி, சண்முகநாதன், ஆகியோர் கலந்து கொண்டு ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு திட்டம் குறித்து எடுத்துரைத்தனர். அடிப்படை தகவல் சேகரிப்பு தேர்வு செய்யப்பட்ட 14 ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர். இதில் சிறப்பு முகாம் ஆகஸ்ட் 31 செப்டம்பர் 01 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறுகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என வேளாண்மை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மதுரையில் வ.உ.சி. சிதம்பரம் பிள்ளை வெண்கல சிலை திறப்பு விழா நிதியமைச்சர் தியாகராஜன், செல்வராஜ் பி.டி.ஆர். காலேஜ் சேர்மன் தனவேல் பாண்டியன் பங்கேற்பு:

மதுரை, செப்டம்பர் 01 2021: மதுரையில் வ.உ.சி. சிதம்பரம் பிள்ளை வெண்கல சிலை திறப்பு விழா நிதியமைச்சர் தியாகராஜன் தென்னிந்தியா வெள்ளாளர் உறவின்முறை தலைவர் செல்வராஜ் பி.டி.ஆர். காலேஜ் சேர்மன் தனவேல் பாண்டியன் பங்கேற்பு:

மதுரை தென்னிந்திய வெள்ளாளர் உறவின்முறை சங்கம் சார்பில் சிம்மக்கல் பகுதியில் வ.உ.சி. சிதம்பரம் பிள்ளை அவர்களது வெண்கல சிலையை நிதியமைச்சர் தியாகராஜன் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சிக்கு வ.உ.சி.யின் பேரன் சிதம்பரம் தெற்கு தொகுதி எம்.எல்.ஏ. புதூர் பூமிநாதன் சங்கத் தலைவர் செல்வராஜ் துணைத்தலைவர் பாண்டியராஜன், பொருளாளர் அசோக்ராஜ் பி.டி.ஆர். காலேஜ் சேர்மன் தனவேல் பாண்டியன் தமிழ்நாடு அப்பளம் வடகம் மோர் வத்தல் சங்க மாநில தலைவர், முருகன் பாண்டியன் அப்பளம் முருகன் இட்லி குமார், மெஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பாளர் பி.டி.ஆர். தனவேல் பாண்டியன் வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்தார். வழக்கறிஞர் பேரவை செயலாளர் நெடுஞ்செழியன், இளைஞரணி தலைவர், சொக்கலிங்கம் மதுரை ஆதீனம், ஹரிஹர, தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய



சுவாமிகள் விக்ரம் பிஷேர்மன் சீனிவாசன் நிர்வாக இயக்குனர் ஜெய்சங்கர், வ.உ.சி. பேரவை நிர்வாகி ராமச்சந்திர குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ரமேசுவரத்தில் குடிசை தொழிலாக மாறிய மதுவிற்பனை, மாதர் சங்கம் புகார்

ராமேசுவரம், செப்டம்பர் 01 2021: ராமேசுவரத்தில் அரசு டாஸ்மாக் கடை இல்லாததால் 300 க்கும் மேற்பட்ட இடங்களில் குடிசை தொழில் போன்று மது விற்பனை நடைபெருவதாக மதர் சங்கம் புகார் தெரிவித்துள்ளது. காவல்துறையினர் கண்டுகொள்ளவில்லை குற்றச்சாட்டு எழுந்துள்ளது. நாடு முழுவதிலும் தேசிய நெடுஞ்சாலை ஓரம் உள்ள டாஸ்மாக் கடைகள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் அகற்றப்பட்டது. இதனால் ராமேசுவரத்தில் 8 மது கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டது. இது போன்று தங்கச்சிமடம், பாம்பன் உள்ளிட்ட பகுதியிலும் மது கடைகள் அடைக்கப்பட்டது. இதன் பின்னர் பாம்பன் பகுதியில் மட்டும் நான்கு டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டது. ராமேசுவரம், தங்கச்சிமடம் பகுதியில் இன்று வரையில் டாஸ்மாக் கடைகள் திறக்கபடவில்லை, ராமேசுவரம் இந்துக்களின் புனித ஸ்தலமாக இருப்பதால் டாஸ்மாக் கடை திறக்ககூடாது. என நீதிமன்றம் வரை சென்று உத்தரவு பெற்றனர். ஆனால் கடைகள் இருந்திருந்தால் குறைந்த பட்சம் 5 கடைகளுக்கும் குறைவாக இருந்திருக்கும். தற்போது பேருந்து நிலையத்திற்குள் உள்ள பெட்டிக்கடைகள், முக்கிய பகுதியில் உள்ள பெட்டிக்கடைகள், போன் செய்தால் உடனே இரு சக்கர வாகனத்தில் வந்து மதுபாட்டில் வினியோகம் செய்பவர்கள் என 300 க்கும் மேற்பட்டவர்கள் சட்ட விரோத மது விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என மாதர் சங்கம் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகின்றனர். இந்த சட்ட விரோத மது விற்பனை செய்யும் கும்பல் அரசின் டாஸ்மாக் கடையை திறக்க முயன்றால் போராட்டத்தை தூண்டி வருவதுடன் அதற்கான பணம் செலவு செய்கின்றனர். ராமேசுவரத்தில் புனித தன்மையை பாதுகாக்க சடட விரோத மது விற்பைன செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வருஷநாடு ஊராட்சி வைகை நகரில் குண்டும் குழியுமான தார் சாலையை சீரமைக்க கோரிக்கை

வருஷநாடு செப்டம்பர் 01 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருசநாடு ஊராட்சியில் அமைந்துள்ள வைகை நகர் என்ற கிராமம் 1983 ஆம் ஆண்டு அப்போது ஏற்பட்ட கனமழையின் காரணமாக வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்றைய அரசு வைகை நகர் என்ற பெயரில் இந்த கிராமத்தை உருவாக்கியது. இந்த கிராமத்தில் சுமார் 200 குடும்பங்களும் 800 வாக்காளர்களும் வசித்து வருகின்றனர். கடந்த 2011ஆம் ஆண்டு தார்சாலை அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தது.



தற்போது 10 வருடங்கள் ஆன நிலையில் தார்சாலை கற்கள் பெயர்ந்து குண்டும் குழியுமாக மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படாத சாலையாக இருக்கின்றது. மேலும் வடிகால் வசதியின்றி கழிவுநீர் களும் சாலையில் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே ஊராட்சி நிர்வாகம் யூனியன் சாலையை சீரமைத்து சாக்கடை வசதி ஏற்படுத்தி கொடுத்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென கிராம பொது மக்களும் சமூக ஆர்வலரான முருகேசன் வார்டு உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார்.

# ஆண்டிப்பட்டி தொகுதியில் விஏஓ முதல் தாசில்தார் வரை இடைத்தரகர்களின் ஆதிக்கம்

வருஷநாடு, செப்டம்பர் 01 2021: கடமலை மயிலை ஒன்றியத்தில் முதியோர் பென்ஷன் பெற ரூபாய் பத்தாயிரம் இடைத்தரகர்கள் மூலம் கொடுத்தாள் வயது வசதி படைத்தவர் என அனைவருக்கும் முதியோர் தொகை ஏற்பாடு செய்யப்படுகிறது. ஜாதி சான்று இருப்பிட சான்று வருமானச் சான்று பிறப்பு இறப்புச் சான்று ஊனமுற்றோர் கணவனால் கைவிடப்பட்டவர் கணவனை இழந்தவர் முதியோர் திருமண உதவித்தொகை என அனைத்திற்கும் கருவரை முதல் கல்லறை வரை ஒவ்வொரு சான்றிதழ் களுக்கும் இடைத்தரகர்கள் விலை நிர்ணயம் செய்துள்ளனர். இதனால் உரிய பயனாளிகள் கூலிவேலை செய்து பணம் கொடுக்க முடியாத காரணத்தால் பலன் பெற முடியாத சூழ்நிலையும் உள்ளது. திருமணம் முடிந்து ஓர் ஆண்டுக்கு மேலான நபர்களுக்கு போலியான ஆவணங்கள் மூலம் திருமண உதவித்தொகை பெற்று வருகின்றனர். ஒரு சில சான்றுகள் ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்டாலும் அவசர தேவைக்கு இடைத்தரகர்களை நாட வேண்டிய சூழல் உள்ளது. விசாரணை என்ற பெயரில் வரும் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட தரகர்களுக்கு அவர்களுக்கு நெருக்கமானவர்கள் மற்றும் பணம் கொடுத்தவர்களுக்கு மட்டும் அவர்களின் பரிந்துரையின் பேரில் அதிகாரிகள் சான்று வழங்கி வருகிறது போன்ற நிகழ்வுகளும் நடக்கின்றன இதனால் இடைத்தரகர்கள் அவர்களுக்குள் போட்டியும் ஏற்படுகிறது. பாதிக்கப்பட்ட பயனாளிகள் கூறும்பொழுது விஏஓ முதல் அதிகாரிகள் வரை மற்றும் அலுவலர்கள் என ஒவ்வொருவருக்கும் ஆர்டர் பெற விலை நிர்ணயத்தை இடைத்தரகர்கள் கூறுவதாகத் தெரிகிறது நேரடியாக உரிய பயனாளிகள் செல்ல நேரிடும் போது அதிகாரிகள் காலதாமதம் படுத்துவதாகவும் இதனால் வெளியில் கடன் வாங்கி கூட தரகர்களை நாடி கையொப்பம் பெற வேண்டிய சூழ்நிலையில் இப்பகுதி மக்கள் இருக்கின்றனர். புதிய ரேஷன் கார்டு ஆன்லைனில் பதிவு செய்தாலும் அதைப் பெற்றுத் தர 5 ஆயிரம் வசூல் செய்யப்படுகிறது வாரிசு சான்றிதழ் பெற வருடங்களைப் பொறுத்து தொகை மாறுபடுகிறது என்றும் கூறி வருகின்றனர். எனவே மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை செய்து முறையான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதா என நேரடி விசாரணை செய்து போலியான ஆவணங்கள் தயாரித்து பெறப்பட்ட உத்தரவையும் பணம் கொடுத்து பெற்ற பயனாளிகளின் நிலையையும் விசாரணை செய்து அரசு பணத்தை வீணடிக்கும் இடைத்தரகர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உரிய பயனாளிகள் பயன்பெறும் வகையில் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட இப்பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கேட்டுக் கொள்கின்றனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# நாகர்கோவில் பிரபல வாகன திருடர்கள் கைது 5 வாகனங்கள் மீட்பு

கன்னியாகுமரி, செப்டம்பர் 01 2021: ஆரல்வாய்மொழி அருகே வாகன சோதனையின்போது பிரபல திருடர்கள் இரண்டு பேரை போலீசார் கைது செய்தனர் அவர்களிடமிருந்து 5 வாகனங்கள் மீட்கப்பட்டன

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அருகே தெற்கு பெருமாள் புறத்தை தலைமையில் தனிப்படை உதவி ஆய்வாளர் சுரேஷ்குமார் மற்றும் ஆரல்வாய்மொழி உதவி ஆய்வாளர் மரியசெல்வம் ஆகியோர் அடங்கிய போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கினார்கள் இதில் ரகசிய தகவல் அடிப்படையில் பொட்டல் குளம் பகுதியை சேர்ந்த முத்துசாமி என்பவரது



சார்ந்த ராமநாதன் என்பவரது மகன் வசனம் பெருமாள் இவருக்கு சொந்தமான ஒரு மினி டெம்போ உள்ளது இதனை அவரது மகன் வேலு என்பவர் ஓட்டி வந்துள்ளார் கடந்த 10 தேதி இரவு 10.30 மணி அளவில் வீட்டின் அருகே வழக்கம்போல் தனது வண்டியை நிறுத்திவிட்டு வீட்டுக்கு சென்ற வேலு மறுநாள் காலை வாகனத்தை எடுப்பதற்காக வெளியே வந்தபோது வாகனத்தை காணவில்லை இதனை கண்டு அதிர்ந்த வேலு வாகனத்தை காணவில்லை என்று அக்கம்பக்கத்தில் தேடி உள்ளார் பின்பு ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் இதுபோன்ற கடந்த மாதம் அஞ்சுகிராமம் கன்னியாகுமரி ராஜக்கமங்கலம் பகுதிகளில் மினி டெம்போ திருட்டுப் போயிருந்தது குறிப்பிடத்தக்கது மேலும் சுசீந்திரம் ஆசாரிப்பள்ளம் போன்ற பகுதிகளில் ஆட்டோ திருடப்பட்டிருந்தது இதனால் மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் ஆரல்வாய்மொழி காவல் நிலையம் ஆய்வாளர் மீனா மகன் முருகன் மற்றும் வில்லுக்குறி நெடுவிளை பகுதியை சார்ந்த தங்க நாடார் என்பவரது மகன் கனகராஜ் ஆகியோரை பிடித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்

விசாரணையில் குமரி மாவட்டத்தில் கடந்த மாதம் பல இடங்களில் வாகனங்களை திருடியது தெரியவந்தது பிடிபட்ட இவர்களிடமிருந்து தகவலின் அடிப்படையில் திருடிய பாகங்களான மூன்று மிணி டெம்போ மற்றும் 2 பயணிகள் ஆட்டோ பல பகுதிகளிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டன கடந்த மாதம் திருடுபோன வாகனத்தை அனைத்தையும் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி பறிமுதல் செய்து உரியவர்களிடம் ஒப்படைக்க போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர் இதுபோல் இதுமட்டுமின்றி 16 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஆரல்வாய்மொழி ஆய்வாளர் மீனாவின் இந்த அதிரடி நடவடிக்கையை போலீசார் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பாராட்டு பெறப்பட்டுள்ளது.



**மதுரை: தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள தல்லாகுளம் தீயணைப்பு நிலையம் மற்றும் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலர் அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்ததை தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாவட்ட ஆட்சியர் அனிஷ்சேகர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டனர்.**



**வடுகபட்டி: தாமரைக்குளம் குடி தண்ணீர் புதிய நவீன முறையில் பைப் லைன் மூலம் வடுகபட்டி போருட்சி பெதுமக்கள் பயன் படுத்த பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் பெரியகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர், அண்ணன் எஸ். சரவணக்குமார் தலைமையில் பூமி பூஜை செய்து துவக்கி வைத்து உடன் பெரியகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் எல் எம். பாண்டியன் வடுகபட்டி போருட்சி செயலாளர் ஆனந்த் வீஸ்வா விடுதலை சிறுத்தைகள் கட்சி சட்டமன்ற தொகுதி செயலளர் மூ ஆண்டவர் உடன் முன்னனி பொறுப்பாளர்கள் இருந்தனர்.**

# சமூக நலத்துறை சார்பில் ஒருங்கிணைந்த காஞ்சீபுரம் மாவட்டத்தில் ஆதரவற்ற சிறுவர் இல்லங்களில் ஆய்வு

காஞ்சீபுரம், செப்டம்பர் 01 2021: ஒருங்கிணைந்த காஞ்சீபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்பு துறையின் கீழ் சுமார் 100 ஆதரவற்ற அனாதை சிறுவர் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது எதிர்கொள்ளவிருக்கும் கொரோனா மூன்றாவது அலை தொற்றில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் வண்ணமும் பேணி காக்கும் வண்ணம் விதமாக மாவட்ட குழந்தைகள் நல குழுமம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதில் ஒரு பகுதியாக மாவட்ட குழந்தைகள் நலக்குழு தலைவர் என். ராமச்சந்திரன் அறிவுறுத்தலின் பேரில் கடந்த ஒருங்கிணைந்த காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறுவர் காப்பகத்திற்கும் மின் அஞ்சல் வாயிலாக கொரோனா தடுப்பு சம்பந்தமாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதனை இல்லங்கள் யாவும் கண்காணிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கும் வகையில் காஞ்சீபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த வெங்காடு கிராமத்தில் தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் துறை



